
# கணக்கீடு

## ஏற்பாடு , நிகழத்தக்க பொறுப்புக்கள் , நிகழத்தக்க சொத்துக்கள் என்பன தொடர்பாக கணக்கு வைத்தல் , வெளிப்படுத்தல்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# வரைவிலக்கணங்கள்



## ஏற்பாடுகள்

நிச்சயிக்கப்படாத காலம் அல்லது தொகையுடன் கூடிய பொறுப்பு **ஏற்பாடு** ஆகும்.

ஒரு ஏற்பாடு உருவாக்கப்படுவதற்கு அவசியமாக அமைய வேண்டிய நிபந்தனைகள் கீழ்வருமாறு :

01 கடந்த கால நிகழ்வின் காரணமாக தற்காலத்தில் ஒரு கடப்பாடு காணப்படும்

02 வளங்களின் பொருளாதார நன்மைகள் வெளிப்பாய்வதற்கான சாத்தியக்கூறு காணப்படல்

03 பொறுப்புத் தொகை நம்பகரமாக மதிப்பிடக் கூடியதாக இருத்தல்

மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்படாத கட்டுப்பாடு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதில்லை இருப்பினும் அவற்றை குறிப்பு வடிவில் வெளிப்படுத்தினால் போதும்

**ஏற்பாடுகளுக்கான உதாரணங்கள்**



- விற்பனை உத்தர வாதங்களுக்கான ஏற்பாடுகள்
- சூழல் பாதிப்பு தொடர்பான நட்டஈடு தொடர்பான உடன்படிக்கை
- நட்டஈடு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான நிச்சயிக்கப்பட்ட நட்ட ஈடு தொடர்பான ஒதுக்கீடு

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## நிகழத்தக்க பொறுப்புக்கள்

கடந்த கால நிகழ்விலிருந்து எழுகின்றதும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் பலாபலன்களினால் மட்டுமே அதன் நிலை உறுதிப்படுவதுமான ஒரு சாத்தியமான கடப்பாடு **நிகழத்தக்க பொறுப்பு** ஆகும்.

கடந்தகால நிகழ்வுகளினால் எழும் தற்போதைய கடப்பாடு உள்ள போதிலும்

**01** அக்கட்டுப்பாட்டினை தீர்வு செய்வதில் நிறுவனத்திற்கு சொந்தமான பொருளாதார நலன்களின் வெளியேற்றத்திற்கான சாத்தியப்பாடு அல்லாத பொழுதும்

**அல்லது**

**02** கடப்பாடின் தொகையினை நம்பகரமான அடிப்படையில் அளவிடுவதற்கு முடியாதுள்ள பொழுதும் அந்தக் கடப்பாடு நிகழத்தக்க பொறுப்பாகும் என அடையாளம் காட்டுவதற்கு முடியும்







தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## நிகழத்தக்க சொத்துக்கள்

கடந்த கால நிகழ்விலிருந்து எழுகின்றதும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் பலாபலன்களினால் மட்டுமே அதன் நிகழ்வு அல்லது நிகழாமை உறுதிப்படுவதுமான ஒரு சாத்தியமான சொத்து இதுவாகும்.




01 நிறுவனம் வெளித்தரப்பினர்களின் மீது நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்திருத்தல்.

02 அரசாங்கத்தின் நெடுஞ்சாலை நிர்மாணம் தொடர்பாக நிறுவனத்தின் காணி சுவீகரிக்கப்பட்டு நிறுவனம் இழப்பீடு கோரியுள்ளது. இவ் இழப்பீடு நிறுவனத்திற்கு வெளியிலுள்ளவர்களால் தீர்மானிக்கப்படுவதால் எதிர்கால நிச்சயிக்கப்படாத நிகழ்வுகள் நிகழ்வதற்கான சாத்தியக்கூறில் தங்கியுள்ளது.

தேறாத வருமானங்கள் நிதிக்கூற்றுகளில் அடையாளம் காணப்படாமையினால் நிகழத்தக்க சொத்துக்கள் நிதிக்கூற்றில் காட்டப்படுவதில்லை. எனவே இதனை சொத்தாக கணக்கீட்டில் கருத முடியாது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# ஏற்பாடுகளுக்கும் நிகழத்தக்க பொறுப்புகளுக்குமிடையேயான வேறுபாடுகள்

| ஏற்பாடுகள் | நிகழத்தக்க பொறுப்புக்கள் |
| --- | --- |
| நிட்சயமற்ற தீர்ப்பனவு தொகையோ அல்லது நிட்சயமற்ற தீர்ப்பனவு காலத்தையும் உடைய ஒரு பொறுப்பாகும். | ஒரு பொறுப்பின் இறுதியான நிலை நிறுவனத்தின் கட்டுப்பாடு இன்றிய ஒன்று அல்லது பல நிட்சயமான எதிர்கால நிகழ்வினால் அல்லது நிகழாமையினால் உறுதிப்படுத்தப்படும். |
| நிதி நிலைமைக்கூற்றில் ஓர் பொறுப்பாக அடையாளப் படுத்தப்படும் | நிதி நிலைமைக்கூற்றில் ஓர் பொறுப்பாக அடையாளப் படுத்தப்படுவதில்லை |
| ஏற்பாடுகள் சிலசமயம் நிகழத்தக்கவைகள் போன்று தோன்றுகின்றன. ஏனெனில் அதன் கொடுப்பனவுகளின் தொகை மற்றும் காலத்தில் ஒரு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது. | தற்கால கடப்பாடு உறுதிப்படுத்தப்படா திருப்பதாலும் அந்த கடப்பாட்டினை தீர்ப்பதனால் வெளிப்பாயும் பொருளாதார நன்மைகள் உறுதிப்படுத்தப்படாதிருப்பதாலும் நிதிநிலைமைக்கூற்றில் காட்டுவதில்லை. |

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# நிகழத்தக்க பொறுப்புக்களில் வெளிப்படுத்த வேண்டியவை கணக்கீட்டுப் பிரயோகம்

நிதி ரீதியான தாக்கம் பற்றிய ஒரு மதிப்பீடு

நிகழத்தக்க பொறுப்பின் தன்மை மற்றும் அது பற்றிய சுருக்கம்



பின்வரும் விடயங்கள் நிதிக்கூற்றில் குறிப்பாக வெளிப்படுத்த வேண்டும்

வளங்களின் வெளிப்பாய்ச்சல் மற்றும் காலம் என்பவற்றின் நிச்சயமற்றதன்மை பற்றிய விளக்கம்

ஏதேனும் சாத்தியமான இழப்பீடு

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## நிகழத்தக்க சொத்துக்களை அடையாளம் காணுதல்



எதிர்கால பொருளாதார நன்மையைப் பெறுவது எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள நிகழ்வில் தங்கியிருக்காத போது நிகழத்தக்க சொத்துக்கள் ஒரு சொத்தாக நிதிக்கூற்றுகளில் அடையாளம் காணப்படும்

## நிகழத்தக்க சொத்துக்களை வெளிப்படுத்தல்

நிகழத்தக்க சொத்துக்கள் சார்ந்த பொருளாதார நன்மை கிடைப்பதற்கான சாத்தியக்கூறு காணப்படும் போது அந்த நன்மைகள் நம்பகரமாக அறவிட முடியாது உள்ள போது நிகழத்தக்க சொத்துக்கள் சம்பந்தமாக நிதிக் கூற்றுகளில் பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்




தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# ஏற்பாடுகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் அல்லது கணக்கீட்டுப் பிரயோகம்

**01**

ஒவ்வொரு வகையான ஏற்பாடுகளையும் தனித் தனியாக வெளிப்படுத்த வேண்டும்

**02**

குறித்த ஆண்டில் ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ள ஏற்பாட்டின் பெறுமதிகள் காட்டப்பட வேண்டும்



**03**

நடப்பாண்டில் செய்யப்பட்ட மேலதிக ஏற்பாட்டு இலாபம் அல்லது நட்டக்கூற்றில் காட்டப்பட வேண்டும்

**04**

ஏற்பாடுகளின் பயன்படுத்தப்பட்ட அளவு மற்றும் மீளப் பதிவளிக்கப்பட்ட அளவு

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# ஏற்பாடுகள் தொடர்பான கடப்பாடுகள்

## சட்டரீதியான கட்டுப்பாடு

1. ஒப்பந்தங்களிலிருந்து
2. பாரளுமன்ற சட்ட மூலம்
3. ஏனைய சட்ட மூலம்

## கட்டுருவாக்க கட்டுப்பாடு / உருவாக்கப்பட்ட கட்டுப்பாடு

1. கடந்த கால செயற்பாடுகளில்
2. பிரசுரிக்கப்பட்ட கொள்கை காரணமாக

தொகுப்பு : திரு.ம.அசோக்குமார் , கணக்கீடு - ஆசிரியர் (யா/ இந்துக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா , தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் - ஆசிரியர் (மு/உடையார்கட்டு.ம.வி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சிகள்

இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்பாக இனம் காண்பதற்கு நிறைவேற்ற வேண்டிய இரண்டு நிபந்தனைகள் எவை?

## பயிற்சிகள்

இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கமைய நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்புடைய கணக்கீட்டு நடைமுறைகள் எவை?

## பயிற்சிகள்

இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின்படி "ஏற்பாடு" என்பதனை வரையறுக்குக?

## பயிற்சிகள்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க சொத்தக்கள் இனம்காணப்பட வேண்டுமா? ஏன்பதைக் குறிப்பிடுக?

உமது விடைக்கு ஆதாரமாக அமைந்த கணக்கீட்டு எண்ணக்கரு ஒன்றினைக் குறிப்பிடுக?



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சிகள்

LKAS 37 (ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்பக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்தக்கள் ) இற்கு அமைய ஏற்பாடு ஒன்றை இனம்காண்பதில் திருப்திப்பட வேண்டிய நிபந்தனை /நிபந்தனைகள் எது?/எவை?

**A –** கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக எழும் சட்ட ரீதியான இல்லது உறுதியான கடப்பாடு ஒன்றினை நிறுவனமானது நிகழ்காலத்தில் கொண்டிருத்தல்

**B –** கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு காணப்படும் வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியத்தன்மை காணப்படல்

**C–** கடப்பாட்டிற்கான தொகை தொடர்பில் நம்பத்தகுந்த மதிப்பீட்டை மேற்கொள்ள முடிதல்.

சரியானது?

1. A மாத்திரம்
2. C மாத்திரம்
3. A,B மாத்திரம்
4. B,C மாத்திரம்
5. A,B,C மாத்திரம்

## பயிற்சிகள்

கம்பனியால் இனம் காணப்பட்டுள்ள 31.03.2015ல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமானம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் என்பன யாவை?

| | மொத்த வருமானம் (ரூ ‘ 000) | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ ‘ 000) |
|---|---|---|
| 01 | 1450 | 50 |
| 02 | 1500 | 50 |
| 03 | 1500 | 200 |
| 04 | 1600 | 50 |
| 05 | 1600 | 200 |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சிகள்

மின்சாரப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்று அதன் வாடிக்கையாளர்களால் பொருட்களில் குறைபாடுகள் உள்ளது எனத் திருப்பி கொடுக்கப்படுமாயின் அதற்கான விலையைத் திருப்பி கொடுப்பதைக் கொள்கையாக கொண்டுள்ளது. எனினும் இது தொடர்பாக சட்டக் கடப்பாடுகள் எதுவமில்லை. இந்நிலைமையில் LKAS 37 (ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்பக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்தக்கள் ) இன்படி ஏற்பாடொன்றை இனங்காண்பதற்கு திருப்திபடுத்த வேண்டிய 03 பிரமாணங்களைக் குறிப்பிடுக?



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk